**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 204/2019 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. விஜயகுமார் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. சுடலைமுத்து | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 01.07.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் மற்றும் வியாபாரம் பார்த்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். கடந்த 06.10.2015–ம் தேதியன்று நான் ஈக்கு வியாபாரம் செய்ய வேண்டி கடைக்குச் சென்று விட்டு வீட்டுக்கு எனது மிதிவண்டியில் வரும் பொழுது இரவு சுமார் 08.00 மணியளவில் காரிபாறை என்ற இடத்தில் உள்ள சாலையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் சரவணன் மற்றும் பெயர் தெரியாத இரு நபர்கள் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

2. நான் அவர்களை பார்த்து சாலையில் இருந்து சற்று நகர்ந்து நிற்குமாறு கூறினேன். அதற்கு பெயர் தெரியாது அந்த 2 நபர்கள் நகர்ந்து நின்றார்கள். அதன்பிறகு நான் எனது வீட்டிற்கு வந்து விட்டேன். அதன்பிறகு குற்றம் சுமத்தப்பட்ட நபர் சரவணன் இருசக்கர வாகனத்தில் எனது வீட்டிற்கு வந்து எனது வீட்டின் வலது புறத்தில் உள்ள இடத்தில் வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னை பார்த்து என்னை ஏன் திட்டி விட்டு வந்தாய் என்றுக் கேட்டேன்.

3. அதற்கு நான் உன்னை நான் எதுவும் திட்டவில்லை என கூறினேன். உடனே அவர் அவரது கையால் எனது இடது காதில் அடித்தார். அதில் நான் கீழே விழுந்து அதில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. உடனே எனது மனைவி எனது

வீட்டிலிருந்து வந்து குற்றம் சுமத்தப்பட்ட நபரை பார்த்து ஏன் என்னை அடித்தார் எனக் கேட்ட பொழுது குற்றம் சுமத்தப்பட்ட நபர் அதற்கு எனக்கும் அவருக்கும் ஏற்கனவே பகை உள்ளது எனவும் எனவே அவனை கொல்ல வேண்டும் என்று தான் நான் அடித்தேன் என்றுக் கூறிவிட்டு அங்கிருந்து சென்று விட்டார்.

4. உடனே எனது மனைவி மற்றும் அங்கிருந்த நபர்கள் என்னை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு என்னை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கு நான் 9 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருக்கும் பொழுது போலிசார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் **புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதிலுள்ளது எனது கையொப்பம் தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. நான் நீதிமன்ற முதல்விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேன் என்றால், சரிதான். 06.10.2015–ம் தேதியன்று நான் சொல்லியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால், சரியல்ல. நான் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால், இரவு 12 மணிக்கு சென்றேன்.

2. மருத்துவரிடம் என்னை தெரியாத நபர்கள் தாக்கியதாக கூறினேன் என்றால், சரியல்ல. நான் மருத்துவரிடம் என்னை தெரியாத நபர்கள் தாக்கியதாக கூறிவிட்டு தற்சமயம் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை. நான் சம்பவ காலக்கட்டங்களில் ஊர் ஊராக சென்று ஈக்கு வியாபாரம் செய்து வந்தேன் என்றால், சரிதான்.

3. சம்பவயிடத்தின் அருகே சங்கரபாண்டி, நாகமணி, செல்லக்கனி, ஐயப்பன், தர்மலிங்கம், பெருமாள்குட்டி மற்றும் எனது வீடு அமைந்துள்ளது என்றால், சரிதான். சம்பவம் நடைபெறும் பொழுது மேற்படி வீட்டில் உள்ள நபர்கள் பார்த்தார்கள் என்றால், பார்த்தார்கள். அவர்களை சாட்சியாக போலிசார் விசாரணை செய்தார்களா என்றால், நான் மருத்துவமனையில் இருந்ததால் அது குறித்து எனக்குத் தெரியாது.

4. விபத்தில் இறந்து போன செல்வராஜ் என்பவர் எனக்கு யார் என்றால், எனது தம்பி ஆவார். அவர் திருநெல்வேலி மாவட்டத்தில் நடந்த ஒரு சாலை விபத்தில் இறந்தார் என்றால், சரிதான். எனது தம்பியின் இறப்புக்கு ஈமச்சடங்கு செலவுகளை குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் செய்தார் என்றால், அதைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் அந்த பணத்தை என்னிடம் சண்டை நடந்த பொழுது கேட்டார்.

5. நான் அப்பொழுது என்னிடம் பணம் கேட்கக் கூடாது என குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் சண்டை போட்டேன் என்றால், இல்லை. செல்வராஜ் மனைவி விபத்துக் காப்பீடு வழக்கு தாக்கல் செய்து அதில் நஷ்ட ஈடு பெற்றிருப்பார் என்றால், பெற்றிருப்பார். ஆனால் அது குறித்த விவரங்கள் எனக்குத் தெரியாது.

6. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது தம்பியின் இறப்பு காரியங்களுக்கு செய்த செலவுத் தொகையை எனது தம்பியின் மனைவியிடம் கேட்ட பொழுது அதனை கொடுக்கக் கூடாது என நான் தடையாக இருந்தேன் என்றால், இல்லை. அதைப் பற்றி எனக்குத் தெரியாது. அப்பொழுது எனது தங்கையின் திருமணத்திற்காக சென்னையில் இருந்து எனது தம்பியின் இறப்புக்கு வந்தேன். அப்பொழுது எனது தங்கை தான் ஈமச் சடங்குகளுக்கு செலவு செய்தார்.

7. நான் சைக்கிளில் இருந்து தவறி விழுந்த காயத்தினை வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது பொய்யாக புகார் கொடுத்து பொய்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. உண்மையில் நான் சொன்ன தேதியில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சைக்கிளில் இருந்து தவறி விழுந்த காயத்தினை வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுக்க வேண்டாம் என்ற காரணத்திற்காக அவர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 204/2019 P.W. 2/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கோபாலகிருஷ்ணன் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. தங்கசாமி | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 01.07.2026**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

1. கடந்த 07.10.2015-ம் தேதி காலை 08.30 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகசரில் நானும் அருணேசன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்பொழுது வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.